# பாடுகளை எதிர்கொள்ளுதல்

Transcribed from a message spoken on October 2016 in Chennai

By *R.S.Milton*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகல விதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறார். எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது. ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும். நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிற தினாலே அந்த இரட்சிப்பு பலன்செய்கிறது. நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்க ளோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக் குறித்து உறுதியான நம் பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திர வத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம் பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களை தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்"* (2 கொரி. 1:3-10).

ஜெபிப்போம். "பரிசுத்த பிதாவே, தேவ மக்கள் நடந்துசென்ற இந்த சிலுவையின் பாதையிலே மரணம் உயிர்த்தெழுதலின் பாதையிலே, நாங்களும் நடக்கின்றோம். ஆனால் உம்முடைய வார்த்தை உண்மை யுள்ளது. நீர் உண்மையுள்ளவர் என்பதை நாங்கள் அறிவோம். உம்முடைய மக்களுக்காக நீர் நியமித் திருக்கின்ற விதி, ஆண்டவரே, உயிர்த்தெழுதல் என்பதற்காய் நாங்கள் உம்மை ஆராதிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்".

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கல்விக்கூடம் அல்லது பள்ளி என்பது விசுவாசத்தின் கல் விக்கூடம், விசுவாசத்தின் பள்ளி. முதலாவது ஆண்டவராகிய இயேசு தம்மைப்பற்றிய ஒரு வெளிப்பாட் டைத் தருகிறார். பிறகு அதைத் தொடர்ந்து அந்த வெளிப்பாடை நமக்கு அனுபவமாக்குகிறார். முதலாவது வெளிப்பாடு, இரண்டாவது அனுபவம். இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்துகிறார். பிறகு அந்த வெளிப்பாட்டை நமக்கு அனுபவமாக்குகிறார். இதன் விளைவாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்குள்ளே உருவாக்கப்படுகிறார். அப்படி உருவாக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நாம் பலருக்குப் பரிமாற முடியும்.

*"அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்க ளுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும்"* (1 பேதுரு 1:7).

## இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடும், பரீட்சையும்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யார் என்பதைப்பற்றி தேவன் முதலாவது நமக்கு ஒரு வெளிப்பாட் டைத் தருவார். அப்போது நாம் அவரை விசுவாசிப்போம். அவர்மேல் நம்முடைய நம்பிக்கை, நம் முடைய பற்றுறுதி, நம்முடைய பிடிப்பு, ஏன் நம்முடைய முழு வாழ்க்கையையும் அவர்மேல் வைக்கின் றோம். இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தபிறகு நமக்கு "emergency exit" என்று ஒன்றை நாம் வைத்துக் கொள்வதில்லை. ஒருவேளை இந்த இயேசுகிறிஸ்து கைவிட்டுவிட்டால் ஒரு backup என்று ஒன்று நமக்கு இல்லை. நித்தியத்திலே எந்த backup இல்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருவரே நம் முடைய backup ஆக இருக்கிறார். எபிரேயர் 11ஆம் அதிகாரத்தை நாம் வாசிப்போம். ஆபிரகாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத் தேவனைப் பின்பற்றுகின்றான். தான் விட்டுவிட்டு வந்த நாட்டையோ, நகரத்தையோ திரும்பிப்பார்ப்பதற்கு அவர் விரும்பவில்லை. In English we use the proverb Burning the bridge. Once we have crossed over, we have burnt the bridge. There is no going back to this world. Out tie

with the world have been broken. அந்த அளவிற்கு இந்த இயேசுகிறிஸ்து நம்பத்தக்கவரா? அந்த அளவிற்கு இந்த இயேசுகிறிஸ்து பற்றிக்கொள்ளத் தக்கவரா என்பது ஒரு கேள்வி.

தேவனுடைய மக்கள் எல்லாருடைய வாழ்க்கையின் ஒரு கட்டத்திலே தேவன் தம்மைப்பற்றிய ஒரு உயர்ந்த உன்னதமான வெளிப்பாட்டை அவர்களுக்குக் கொடுப்பார். நாம் மத்தேயு 16ஆம் அதிகாரத்தில் வாசிப்பதுபோல, "*மக்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள்,*" என்று ஆண்டவராகிய இயேசு கேட்கிறார். அதற்கு அவர்கள், "நீர் இவரென்றும் அவரென்றும்," பதில் சொல்கிறார்கள். அப்பொழுது இயேசு பேதுருவைப் பார்த்து, "*நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள்,*" என்று கேட்கிறார். அதற்குப் பேதுரு, "*நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து,*" என்று சொல்கிறார். "You are the Son of the living God" என்று சொன்ன ஒரு சில நாட்கள் கழித்து பேதுருவினுடைய அந்த விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது. பரீட்சிக்கப்படும்போது பேதுரு "இவர் யார் என்று நான் அறியேன்," என்று சொல்லுகிறார்.

### பரீட்சை

சோதனையிலே நாம் எப்படி அதை வெல்கிறோம் என்பதை நாம் பின்பு பார்ப்போம். ஆனால் இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேவன் தம்மைப்பற்றிய ஒரு உயர்ந்த வெளிப்பாட்டைத் தரும்போது அந்த வெளிப்பாட்டை நம்முடைய வாழ்க்கையிலே பரீட்சிப்பார், சோதிப்பார், நிரூபிப்பார். இதை நாம் நன்றாய் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு வெளிப்பாடு நம்முடைய அனுபவ வாழ்க்கையிலே பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டு நம்முடைய அனுபவமாகிறவரை நாம் அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து graduate பண்ணவில்லை என்று அர்த்தம். உயர்ந்த பள்ளிக்கூடம். But we have not yet graduated from that school.

யோபுவின் புத்தகத்திலே யோபு தன்னைப்பற்றி "*அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்,*" என்று சொல்லுகிறார் (யோபு 23:10). "After he has tested me, I will be like a gold". 1 பேதுரு 1:7ஆம் வசனத்திலும் பேதுரு அதே எண்ணத்தைச் சொல்கிறார். "*அழிந்துபோகிற பொன் புடமிடப்பட்டு அதனுடைய தன்மை என்ன, தரம் என்ன, என்று சோதிக்கப்படுகிறது. உங்கள் விசுவாசம் எந்தப் பொன்னையும்விட விலையேறப்பெற்றது.*"

யோபுவின் புத்தகத்தை நீங்கள் பல தடவைகள் வாசிக்க வேண்டும். யோபுவின் புத்தகம் படிப்பதற்கு மிக எளிமையான புத்தகம் அல்ல. எந்த மனிதனும் "நான் யோபுவின் புத்தகத்தைக் கரை கண்டு விட்டேன்," என்று சொல்ல முடியாது. "*நான் நடந்துபோகிற பாதைகளை தேவன் அறிவார். அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்.*"

தேவன் ஒரு முடிவை வைத்திருக்கிறார். தேவனுடைய முடிவு தேவனுடைய மக்களுக்குள், (இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதானால்) ஏதோவொரு விதத்தில் நம்மைப் பொன்னாக விளங்கச் செய்வது. நான் இப்படி ஒரு பொருள்விளக்கம் கொடுக்கும்போது அதிகமான கற்பனையாக பொருள் விளக்கம் கொடுக்கவில்லை. பொன்னாக விளங்குவது என்பது நமக்குள் முன்பு இல்லாத கிறிஸ்துவை தேவன் நமக்குள் உருவாக்குகிறார். மற்றபடி பொன், வெள்ளி என்று எதையும் நாம் சொல்லிவிட முடியாது. இதுவரை எனக்குள் இல்லாத ஒரு கிறிஸ்துவை தேவன் நமக்குள், தேவன் எனக்குள், உருவாக்குகிறார். அதேபோல மற்றவர்களுக்கு இதுவரை கொடுக்க முடியாத ஒரு கிறிஸ்துவை நாம் அவர்களுக்குக் கொடுக்க முடிய வேண்டும்.

### 1. இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துதல்

நாம் விளங்கிக்கொள்வதற்காக இதை நான்கு பகுதிகளாக விளக்கிச்சொல்கிறேன். முதலாவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி தேவன் நமக்கு ஒரு வெளிப்பாட்டைத் தருகிறார். பிறகு அந்த வெளிப்பாட்டினால் நாம் வாழ்வதற்கான சூழ்நிலைகளை நம்முடைய வாழ்க்கையிலே கொண்டுவருவார். தேவன் நமக்கு நம்முடைய வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு பல்வேறு ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும், வளங்களையும் தருவதில்லை. மாறாக இயேசுகிறிஸ்து என்கின்ற தம்முடைய குமாரனையே எல்லாவற்றையும் கொண்டவராக நமக்குள் வழங்கியிருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்மை, "*நான் அல்பாவும் ஓமேகாவும், தொடக்கமும் முடிவும், முதலும் கடைசியுமாக இருக்கிறேன்,*" என்று சொல்கிறார். அதனுடைய பொருள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான எல்லாச் செல்வங்களும், வளங்களும், நன்மைகளும், ஆசீர்வாதங்களும் அடங்கியிருக்கின்றன. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு வெளியே நம்முடைய

இம்மைக்கும், மறுமைக்கும் தேவையான ஒன்றும் இல்லை. தேவனிடத்தில் நாம் எதையாவது கேட்டால் அவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அப்படிப்பட்ட ஒரு புதிதான நபராக வெளிப்படுத்துவார். இயேசுகிறிஸ்துவுக்கு வெளியே அவர் ஒன்றையும் தந்துவிடப் போவதில்லை. இதை நன்றாய்ப் புரிந்து கொள்ள வேண்டும்.

மனித வாழ்க்கையின் நோக்கமும் சரி, மனித வாழ்க்கையின் எல்லா அனுபவங்களின் முடிவும் சரி, இயேசுகிறிஸ்துவை மனிதனுக்குள் அல்லது மனித இனத்தில் அல்லது மனுக்குலத்தில் அல்லது மனு உலகில் உருவாக்குவதுதான் தேவனுடைய நோக்கம். தனி மனிதனுக்குள்ளாகிலும் சரி அல்லது ஒரு சமுதாய மனிதர்களுக்குள்ளாக இருந்தாலும் சரி அவர்களுக்குள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை உருவாக்கி அவர்கள்மூலமாய் இயேசுகிறிஸ்துவை வெளிப்படுத்துவது என்ற ஒரு நோக்கையும், இலக்கையும்தவிர தேவன் இந்தப் பூமியிலே வேறு எதையும் செய்யவில்லை. சாதாரணமாய்த் தோன்று கிற மனித வாழ்க்கை தேவனுடைய இப்படிப்பட்ட நித்திய இலக்கோடு பின்னிப்பிணைந்திருக்கிறது. ஒருபக்கம் அது சாதாரணமான நம்முடைய உடல்நலம், உணவு, வேலை, வருவாய், உறவு ஆகியவை களைப்பற்றியதுபோல காணப்படும். ஆனால், சாதாரணமாய்த் தோன்றுகிற இந்தக் காரியங்களுக்குப் பின்பு தேவன் நித்திய மதிப்புடைய ஒன்றை நம்முடைய வாழ்க்கையிலே உருவாக்கிக்கொண்டிருக் கின்றார்.

முதலாவது தேவனுடைய நோக்கம் இந்த இயேசுகிறிஸ்து எவ்வளவு உயர்ந்தவர், எவ்வளவு மேன்மை யானவர், எவ்வளவு போதுமானவர், எவ்வளவு நிறைவானவர் என்பதை அவர் நமக்கு வெளிப்படுத்தி, நம்முடைய வாழ்க்கையிலே நிரூபித்து வருகிறார். உபா.8:2—5ஆம் வசனங்களை நாம் அடிக்கடி வாசித் திருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையின் எல்லாச் சிலுவைப் பாடுகளுக்கும் தேவன் ஒரேவொரு நோக் கத்தை வைத்திருக்கிறார். அது என்னவென்றால் “*மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல; தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைக்க முடியும்.*” வனாந்தரத்திலே 40 வருடங்களாய் நடந்துபோகிற மக்களுக்கு உணவும், தண்ணீரும் தேவையா அல்லது தேவனுடைய வார்த்தை தேவையா? உணவும் தண்ணீரும் தேவை. ஆனால் மனிதர்களுடைய எந்த logistics கொண் டும் அத்தனை இலட்சம் மக்களுக்கு உணவும் தண்ணீரும் 40 வருடங்களுக்கு நாம் ஏற்பாடுசெய்ய முடியாது.

“ஆறு இலட்சம் மக்களுக்கு ஒவ்வொரு நாளும் தண்ணீர் வேண்டுமென்றால் எத்தனை லாரி தண்ணீர் வேண்டும்; அவர்கள் எல்லாருக்கும் உணவு வேண்டுமென்றால் எத்தனை டன் உணவு வேண்டும்,” என்று சிலர் மிகவும் சுவையான கணக்கெல்லாம் போடுவார்கள். மனிதனுடைய எந்தத் திட்டத்திற்கும் அது அப்பாற்பட்டது. மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, இயற்கையான வளங்களால் மட்டுமல்ல, கிறிஸ்துவில் உள்ள முடிவில்லாத பரம வளங்களால் வாழ முடியும். இந்தக் கிறிஸ்துவுக்குள் அப்படிப் பட்ட முடிவில்லாத பரம வளங்கள் உண்டு என்பதைத் தேவன் காண்பிக்கிறார். கிறிஸ்துவால் வாழ முடியும் என்பது வெறும் ஏட்டு உண்மையாக அல்ல, நம்முடைய அனுபவ உண்மையாக மாற வேண் டும். இது தேவனுடைய விருப்பம்.

நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் நம்முடைய நம்பிக்கையை, விசுவாசத்தை, வைத்திருக் கிறோம். அது உண்மைதான். ஆனால் முன்போ பின்போ அந்த உண்மையை நம்முடைய வாழ்க்கை யிலே அனுபவமாக்குவதற்கு தேவன் இப்படிப்பட்ட துன்பங்களை, பாடுகளை, பரீட்சைகளை, சோதனைகளை உருவாக்குகின்றார். சோதிக்கப்படாத விசுவாசம் ஒரு பிள்ளையினுடைய விசுவாசம். சோதிக்கப்பட்ட விசுவாசம் ஒரு மகனுடைய விசுவாசம். Untested faith is the faith of the child. Tested faith is the faith of the son. ஒரு பிள்ளையை அடித்தால் உடனே அழுதுவிடும். ஆனால் குமாரர்கள் அப்படி இல்லை. They go from untested faith to the tested faith.

பிலிப்பியர் 4:19இல் பவுல் சொல்வதை நாம் அறிவோம். “*மகிமையின் செல்வங்களைக்கொண்டு உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவில் நிறைவாக்குவார்.*” கிறிஸ்து இயேசு ஒரு மாபெரும் வாய்க்கால். பரத்தையும் பூமியையும் இணைக்கின்ற ஒரு மாபெரும் வாய்க்கால் கிறிஸ்து. அவர்தான் மாபெரும் ஏணி. தேவனுடைய பரம செல்வங்களை அல்லது மகிமையின் செல்வங்களை மனிதர்கள் பெற்று மகிழ்வதற்கும், இன்புறுவதற்கும், அனுபவிப்பதற்கும், திருப்தியடைவதற்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒரு மாபெரும் வாய்க்காலாகவும், ஒரு மாபெரும் ஏணியாகவும், வானத்தையும் பூமியையும் இணைக்கின்றவராக இருக்கின்றார். பிலிப்பியர் 4:11-13 “*எந்த நிலைமையிலிருந்தாலும் நான் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்*”. எப்படிக் கற்றுக்கொள்ள முடியும்? அது இரகசியம். இந்த இரகசியத்தை எந்த நூலகத்திலும், எந்த நூலிலும் நாம் கற்றுக்கொள்ள முடியாது. இந்த

இரகசியத்தை பரீட்சை, சோதனை, துன்பம், பாடு என்கின்ற அனுபவ பள்ளிக்கூடத்தில்தான் கற்றுக் கொள்ள முடியும். எந்த நிலையிலும் கிறிஸ்துவால் வாழ முடியுமா? ஆமென். எந்த நிலையிலும் கிறிஸ்துவால் வாழ முடியும். "*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலன் உண்டு*". தேவனுடைய மக்கள் இந்த வசனத்தையெல்லாம் போட்டிருப்பார்கள். ஆனால் இந்த வசனம், இந்த வாக்கியம் உண்மையா பொய்யா என்பது எங்குதான் காணப்படும்? யோபுவின் புத்தகத்தில் காணப்படுகிறது. யோபு அந்தச் சோதனையை, பரீட்சையை, தாங்குகிறான்.

**2. இயேசு கிறிஸ்துவைப்பற்றிய பெற்றறிவு உற்றறிவாக மாறுதல்**

இரண்டாவது, இயேசுகிறிஸ்துவைப்பற்றிய இரண்டாம்பட்ச அறிவை நம்முடைய second-hand knowledge first-hand ஆக மாற்றுவது தேவனுடைய நோக்கம். Second-hand book, first- hand book. புதுப் புத்தகம், பழைய புத்தகம் என்று நாம் சொல்வோம். ஆனால் அது சரியான வார்த்தை அல்ல நாம் நம்முடைய புத்தகத்திலிருந்து படித்தாலும் சரி. நான் சொல்வது நம்முடைய பெற்றறிவை உற்றறி வாக மாற்ற வேண்டும். இது புரிந்துகொள்வதற்குக் கொஞ்சம் கடினமாக இருக்கிறதா? பெற்றறிவு என்றால் வேறு ஒருவரிடமிருந்து, வேறு எங்கோயிருந்து, பெற்ற ஒரு அறிவு. உற்றறிவு என்றால் நானே அறிந்து அனுபவமாக்கிய அறிவு.

சமாரியா நாட்டிலே சமாரியர்கள் அந்தப் பெண்ணிடம், "நீ சொன்னதினால் இல்லை. நாங்களே இவர் சொல்வதைக் கேட்டும், அவரைக் கண்டும் இவர் உலக இரட்சகர் என்பதை அறிந்திருக்கிறோம். நீ அவரைப் பார்த்துப் பேசியபோது உன்னுடைய வாழ்க்கையினுடைய இரகசியங்களை எல்லாம் அவர் பிட்டுப்பிட்டு வைத்தார் என்று சொன்னது இருக்கட்டும். அதனால் நாங்கள் இயேசுவிடம் அறிமுகப்படுத் தப்பட்டோம். ஆனால்? இப்போது நாங்களே அவரைப் பார்த்தோம்; அவர் சொன்னதைக் கேட்டோம்; அதனால் அவர் உலக இரட்சகர் என்று இப்போது நாங்கள் அறிந்திருக்கிறோம்." யாரோ ஒருவர் இயேசுவைப்பற்றிச் சொன்னார்கள், இயேசுவினிடத்தில் அறிமுகப்படுத்தினார்கள். அது முதல் கட்டம். அது பெற்றறிவு.

பெற்றறிவு அவசியமா? அவசியம். ஆனால், முன்போ பின்போ அந்தப் பெற்றறிவை உற்றறிவாக மாற்றுவார். Second-hand knowledge will be made into first-hand experiential knowledge. முதலாவது அறிவுக்குப் பெயர் objective knowledge. இரண்டாவது அறிவுக்குப் பெயர் Subjective knowledge. தேன் இனிக்கும் என்பதைக் கேட்டுத் தெரிந்துகொள்வது வேறு. தேன் இனிக்கும் என்பதை சுவைத்துத் தெரிந்துகொள்வது வேறு. "*என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது*" (யோபு 42:5). "I had heard of you in my hearing. But now I see you with my own eyes". நான் உம்மை என் காதினால் கேள்விப்பட்டிருக்கிறேன் என்பது இரண்டாம்பட்ச அறிவு. இயேசுவைப்பற்றி, அவருடைய ஜீவன் என்னுடைய ஜீவனாக உள்ளது, அவருடைய ஜீவன் தெய்வீக ஜீவன், அவருடைய ஜீவன் உயிர்த்தெழுந்த ஜீவன் என்பது நாம் அவரைப்பற்றி கேள்விப்பட்டது. ஆனால், உண்மையிலேயே இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவனால் வாழ முடியுமா என்பது இது போன்ற துன்பங்கள், பாடுகள், சோதனைகள், பரீட்சைகள் வழியாகப் போகும்போது புலப்படும். அப்போதுதான் நாம் வாழ்கின்ற ஜீவன் நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் ஜீவனா, மரணத்தினூடாய்ச் சென்று உயிர்த்தெழுந்த ஜீவனா என்பது புலனாகும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

பேதுருவுக்கு அது வெளிப்பட்டது. பவுலுக்கு வெளிப்பட்டது. நமக்கு வெளிப்படுமா? நிச்சயமாக வெளிப்படும். இயேசுகிறிஸ்து முதல் நூற்றாண்டிலே ஒரு மாதிரி இருந்தார். இப்பொழுது இருபதாம் நூற்றாண்டிலே அவருடைய தன்மை மாறிவிட்டது என்பதல்ல. "*அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமை யாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்*". என்றைக்கு அவர் அப்படி மனித சாயலாகி, மனித வாழ்க்கை வாழ்ந்து, மரணத்தினூடாய்ச் சென்று உயிர்த்தெழுதலில் வெளிவந்தாரோ அன்று முதல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எல்லா மனிதர்களுக்கும், அவரை நம்புகிற, விசுவாசிக்கிற, பற்றிக்கொள்கிற, தங்களை ஒப்புவித்த தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் ஒரே மாதிரி இருக்கிறார். அல்லேலூயா! பேதுருவுக்கும் பவுலுக்கும் ஒரு கிறிஸ்து. நமக்கு இன்னொரு கிறிஸ்துவும் அல்ல. The very Christ, the very same Christ, available to Paul, Peter and the apostles, the same Christ, is available to all his children down the centuries. No change in him. If they could live by Christ, we could live by Christ. If they could withstand any test, any suffering, any trial, we can also withstand the same suffering or trial or test.

யோவான் 20ஆம் அதிகாரத்தை நீங்கள் வாசித்துப் பாருங்கள். உயிர்த்தெழுந்த நாள் காலையிலே மரிய மகதலேனாள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நளததைலம் பூசுவதற்காகக் கல்லறைக்குச் செல்கின்றாள். கல்லறை காலியாக இருக்கிறது. உடனே அவள் சீடர்களிடத்தில் போய், *"இயேசுவை அங்கு காணவில்லை,"* என்று சொல்கிறாள். உடனே யோவானும் பேதுருவும் ஓடி வருகிறார்கள். அவர்கள் கல்லறைக்குள் நுழைகிறார்கள். உண்மையிலேயே கல்லறை வெறுமையாக இருக்கிறது. வெறுமையாக இருந்ததினால் யோவானும் பேதுருவும் இயேசுகிறிஸ்து இப்பொழுது உயிர்த்தெழுந்து விட்டார் என்று திரும்பிப் போய்விட்டார்கள். யோவானுக்கும் பேதுருவுக்கும் இயேசுகிறிஸ்து உயிர்த் தெழுந்துவிட்டார் என்று தெரியுமா? தெரியும். ஆனால் மரியாளோ அந்த இடத்திலேயே நின்று கொண் டிருக்கிறாள். அவள் வீடு திரும்பவில்லை. இயேசு அந்த இடத்திலே நிற்கிறார். மரியாள் அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்துக்கொண்டு, *"தோட்டக்காரரே! எங்கள் போதகருடைய உடலை நீர் எடுத்திருந்தால் சொல்லும்,"* என்று சொல்கிறாள். தோட்டக்காரர்போல தோன்றின நபர் "மரியாளே" என்று கூப்பிடுகிறார். இயேசுகிறிஸ்துவினுடைய தொனி அவளுக்குப் பரிச்சயமானதால், "இவர் தோட் டக்காரர் இல்லை. இவர் இயேசு," என்று அவள் புரிந்துகொண்டு. *"ரபூனி, போதகரே,"* என்று சொல்கிறாள்.

இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார் என்று இப்பொழுது மரியாளுக்கும் தெரியும், பேதுருவுக்கும் தெரியும். பேதுருவினுடைய அறிவு detective knowledge. கல்லறை வெறுமையாக இருந்தது. ஆகவே இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டார். மரியாளுடைய அறிவு, detective knowledge அல்ல. "நான் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவைக் கண்டேன்."

யோபு சொன்னதுபோல "I have seen Him". I have known Him "உண்மையிலேயே இயேசுகிறிஸ்துவின் ஜீவனால் வாழ முடியும், என்பதை என்னுடைய அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன்," என்று சாட்சி பகர முடியும்.

### 3. கிறிஸ்துவைப் பிறருக்குப் பரிமாறுவதே அனுபவ அறிவின் நோக்கம்

மூன்றாவது, எதற்காக இப்படிப்பட்ட அனுபவ அறிவை first-hand knowledge அல்லது உற்றறிவைத் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தர விரும்புகிறார் என்பதற்கான பதில் நாம் இப்பொழுது வாசித்த 2 கொரிந்தியர் 1ஆம் அதிகாரத்தில் உள்ளது. மற்றவர்களுக்கு நாம் கிறிஸ்துவை வழங்குவதற் கும் பரிமாறுவதற்கும் வெறுமனே ஒரு ஏட்டறிவு இருந்தால் போதாது. நான் சொன்னதுபோல உற்றறிவு வேண்டும். நாம் மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட கிறிஸ்துவை வழங்க முடியும், பரிமாற முடியும். நாம் எந்தக் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமோ, அனுபவித்திருக்கிறோமோ, எந்தக் கிறிஸ்துவால் வாழ்ந் திருக்கிறோமோ அந்த கிறிஸ்துவைத்தான் மற்றவர்களுக்கும் பரிமாற முடியும். எந்தச் சூழ்நிலை யிலுள்ள மக்களுக்கு நாம் கிறிஸ்துவைக் கொடுத்து இரட்சிப்புக்குள் கொண்டுவர முடியும்? நாம் எந்தக் கிறிஸ்துவை அறிந்திருக்கிறோமோ, அனுபவித்திருக்கிறோமோ, எந்தக் கிறிஸ்துவால் வாழ்ந்திருக் கிறோமோ அந்த கிறிஸ்துவைத்தான் மற்றவர்களுக்கும் பரிமாற முடியும். எந்த சூழ்நிலையில் உள்ள மக்களுக்கு நாம் கிறிஸ்துவைக் கொடுத்து இரட்சிப்புக்குள் கொண்டுவர முடியும். நாம் எந்த கிறிஸ் துவை அறிந்திருக்கிறோமோ அனுபவித்திருக்கிறோமோ அந்தக் கிறிஸ்துவைத்தான் அவர்களுக்குக் கொடுக்க முடியும்.

2 கொரிந்தியர் 1ஆம் அதிகாரத்தில் "நாங்கள் ஏன் இப்படி ஆறுதல் அடைகிறோமென்றால் நாங்கள் அடைந்த ஆறுதலைக்கொண்டு மற்றவர்களுக்கு ஆறுதலைக் கொடுப்பதற்காக நாங்கள் ஆறுதல் செய்யப்படுகிறோம்," என்று அவர் சொல்கிறார். To comfort others with the comfort with which we have been comforted. எப்படிப்பட்ட ஆறுதலை நாம் தேவனிடத்திலிருந்து பெற்றிருக்கிறோமோ அப் படிப்பட்ட ஆறுதலைத்தான் ஆறுதல் தேவைப்படுகிற மற்ற மக்களுக்கு நாம் தர முடியும் அல்லது 2 கொரிந்தியர் 4:15, 16ஆம் வசனங்களில் உள்ளதுபோல, "எங்கள் புறம்பான மனிதனானது அழிந்தும் எங்கள் உள்ளான மனிதனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" அல்லது யோவான் 12:24ஆம் வசனத்தில் ஆண்டவராகிய இயேசு சொன்னதுபோல, "கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்."

### ஊழியம்

ஊழியம் என்பது ஏதோ ஒரு செய்தியை ஆயத்தம்பண்ணிப் பேசுவது அல்ல. ஒரு தலைப்பைக் கொடுத்து மூன்று பெரிய குறிப்புகள், இரண்டு உபகுறிப்புகளை வைத்துப் பேசுவதல்ல ஊழியம். ஊழியம் என்பது நம்முடைய அனுபவ வாழ்க்கையில் எந்தக் கிறிஸ்துவால் நாம் வாழ்ந்திருக்கிறோம்

அல்லது வாழ்ந்துகொண்டிருக்கிறோம், எப்படிப்பட்ட கிறிஸ்துவை நாம் கண்டடைந்திருக்கிறோம், இந் தக் கிறிஸ்துவால் நாம் எந்தெந்தச் சூழலிலெல்லாம் வாழ முடியும் என்று அறிந்திருக்கிறோமோ அல் லது அப்படிப்பட்ட கிறிஸ்து நமக்குள் உருவாக்கப்பட்டிருக்கிறாரோ அதற்குப் பெயர்தான் ஊழியம்.

**4. பிறருக்காக ஜெபம்**

கடைசியாக, நான்காவது குறிப்பு. அது மூன்றாவது குறிப்போடு தொடர்புடையதுதான். யோபு 42ஆம் அதிகாரம். அந்த வாக்கியம் மிக முக்கியமான வாக்கியம். 10ஆம் வசனம்: "யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்." தேவனுடைய வழிகள் விந்தை யானவைகள். யோபுவுக்கு ஜெபம் தேவைப்பட்டது. அவனுடைய நண்பர்களுக்கு எந்த ஜெபமும் தேவையில்லை. யோபுதான் துன்பத்திலும், பாடுகளிலும், கதறுதலிலும் இருக்கிறான். யோபுவினுடைய சிநேகிதர்கள் யோபுவுக்காக ஜெபிக்கவில்லை. ஆனால், யோபு தன்னுடைய சிநேகிதர்களுக்காக, நண்பர்களுக்காக, ஜெபிக்கிற ஒரு நிலையை எட்டியிருக்கிறான்.

பாடுகளின் வழியாகப் போய்க்கொண்டிருக்கிற ஒருவனிடம் போய், "உங்களுக்காக எல்லாரும் ஜெபம் பண்ணுவார்கள்," என்று சொல்லாமல் "எல்லாருக்காகவும் நீங்கள் ஜெபம் பண்ண வேண்டும்," என்று சொன்னால் எப்படியிருக்கும்? மிகவும் விந்தையாக இருக்கும். அவர், "எனக்கே ஜெபம் தேவை. நான் எப்படி மற்றவர்களுக்காக ஜெபிப்பது?" என்று நினைக்கலாம்.

ஆபிரகாம் பிள்ளையில்லாதவன். ஆனால், கர்த்தர் ஆபிரகாமை பிள்ளையில்லாத ஒரு ராஜாவினுடைய வீட்டிற்குக் கொண்டுபோய், "அவனுடைய வீட்டில் பிள்ளைகள் பிறக்க வேண்டும் என்று ஜெபம் பண்ணு," என்று அவனிடம் சொல்லுகிறார். அவன் ஜெபிக்கிறான்; ராஜாவுக்குப் பிள்ளைகள் பிறக்கின் றார்கள். ஆனால், இவனுக்கோ பிள்ளைகள் இல்லை.

தேவனுடைய வழி மிகவும் விந்தையானது. "ஆண்டவரே! இவர்களையெல்லாம் ஆசீர்வதியும்," என்று ஜெபிப்பது கடமைக்காகப் பண்ணுகிற ஜெபம் அல்ல. இதுதான் பரிந்துபேசுவது, திறப்பின் வாசலில் நிற்பது, மன்றாடுவது. பழைய ஏற்பாட்டிலே அதற்குப் பெயர் திறப்பின் வாசலிலே நிற்பது. ஒரு மனித னுக்கு அழிவு வருவதைத் தடுப்பதற்குப் பெயர் மன்றாடுவது அல்லது தடைபட்ட ஒரு நன்மையை, ஒரு ஆசீர்வாதத்தை, கொண்டுவருகிறது மன்றாடுவது. "ஆண்டவரே, இந்த மனிதனுக்கு, இந்தக் குடும்பத்துக்கு, இந்த மக்களுக்கு, வரவிருக்கிற அழிவை நீர் நிறுத்த வேண்டும்," என்று சொல்வது மன்றாடுவது. "ஆண்டவரே! இந்த நன்மை குறைவுபடுகிறது. இந்த நன்மையை நீர் வழங்க வேண்டும்," என்று சொல்வது மன்றாடுவது. தேவனுடைய மக்களாக இருந்தாலும் சரி, தேவனை அறியாத மக்க ளாக இருந்தாலும் சரி. நாம் மன்றாடுவதினால் அவர்களுடைய வாழ்க்கைக்குள் ஒரு ஆசீர்வாதத்தை, ஒரு நன்மையை, ஒரு புதிய தொடக்கத்தை நம்மால் கொண்டுவர முடியும்.

நாம் வெறுமனே கையாலாகாதவர்கள்போல, "ஜெபம்தான் உங்களுக்காகப் பண்ண முடியும் பிரதர்," என்று சொல்லக் கூடாது. சில கிறிஸ்தவர்கள், "நம்மால் என்ன செய்ய முடியும்? ஜெபம்தான் செய்ய முடியும்," என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அப்படியல்ல. ஜெபம் அல்லது மன்றாடுவது என்பது "கவலைப்படாதீர்கள். எல்லா வழிகளும் மூடிவிட்டதா? ஒரு வழி இருக்கிறது. தேவனிடத்திலிருந்து அந்த ஆசீர்வாதங்களை நான் பெற்றுத் தர முடியும்," என்பதுதான் மன்றாட்டு.

"சரீரத்திலே ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் பாடுபடும். ஒரு அவயவம் சந் தோஷப்பட்டால், மகிமைப்பட்டால், எல்லா அவயவங்களும் சந்தோஷப்படும்," என்று 1 கொரிந்தியர் 12ஆம் அதிகாரத்திலும், ரோமர் 12ஆம் அதிகாரத்திலும் நாம் வாசிக்கிறோம். என்னமோ ஒரு அவயவம் தனியாகப் பாடுபடுகிறது என்று நினைத்துக்கொள்ளக் கூடாது. ஒரு அவயவம் பாடுபட்டால் அது எல்லா அவயவங்களையும் பாதிக்கும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் சந்தோஷப்படும்.

தேவனுடைய மக்களுக்குப் பரிமாறுவதற்கென்று அல்லது கொடுப்பதற்கென்று ஏதோவொன்று நம் முடைய கைகளிலே இருக்க வேண்டும். பெரும்பாலும் தேவனுடைய மக்களாகிய நாம் வெறுங்கையர் களாக இருக்கிறோம். பாடுகள், துன்பங்கள், அழுத்தங்கள், சூடுகள், போராட்டங்கள், யுத்தங்கள் ஆகியவைகள்மூலமாகக் கிறிஸ்துவாகிய கொள்ளைப்பொருளை நாம் பெறுகிறோம். இதற்குப் பெயர் "The spoil of the battle".

நீங்கள் யாராவது வாசிக்க விரும்பினால் "The spoil of the battle" என்ற சிறிய கைப்பிரதியை வாசி யுங்கள். அது உங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்கும். எப்படிப்பட்ட பொருள்களைவைத்து நாம்

மற்றவர்களையும், நம்மையும் கட்டியெழுப்புகிறோம்? பொன் வெள்ளியைவைத்தா கட்டியெழுப்பு கிறோம்? பாடுகள், துன்பங்கள், போராட்டங்கள், போர்கள், அழுத்தங்கள், வெப்பங்கள் ஆகியவைகள் வழியாக நாம் எந்தக் கிறிஸ்துவால் வாழ்கிறோமோ, அந்தக் கிறிஸ்து நாம் வைத்துக்கொள்வதற்காக அல்ல. அந்தக் கிறிஸ்து தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் கொடுப்பதற்காக. அதுதான் மன்றாடுவது. அதுதான் தேவனுடைய மக்களுக்காகத் திறப்பின் வாயிலே நின்று அவர்களுக்காகப் பரிந்துபேசுவது.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காகப் பரிந்துபேசுகிற பிரதான ஆசாரியர். அவர் நம்மைப்போல் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்டிருக்கிறார். எதற்காக? சோதிக்கப்படுகிற நமக்கு உதவிசெய்வதற் காக. நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல் எல்லா விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாத பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்.

தேவனுடைய மக்களுக்காக அல்லது தேவனற்ற மக்களுக்காக பரிதபிப்பது எப்பொழுது சாத்தியமென் றால் நாம் அந்தப் பாடுகள், துன்பங்கள், அழுத்தங்கள், வெப்பங்கள், போராட்டங்கள், போர்கள்வழி யாகச் சென்று கிறிஸ்துவால் வாழ்ந்தோமென்றால் அதே நிலையிலிருக்கிற மக்களுக்காக நாம் பரிதபிக்கவும் முடியும், உதவி செய்யவும் முடியும், அவர்களுக்காக மன்றாட முடியும்.

நான் சொன்னதை மீண்டும் சொல்கிறேன். முதலாவது, இயேசுகிறிஸ்துவைப்பற்றிய ஒரு உயர்ந்த வெளிப்பாட்டைத் தேவன் தருவார். இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுதலாக இல்லையென்றால் இந்தச் சூழ்நிலையை நாம் கடந்துபோக முடியாது. அந்தச் சூழ்நிலைகளில் பெறுவதுதான் வெளிப்பாடு. புத்தகத்தைப் படித்துப் பெறுவது வெளிப்பாடு அல்ல. நான் நிறைய புத்தகங்கள் படிக்கிறவன். தேவ னுடைய மக்களுடைய அனுபவ வாழ்க்கையிலே கிறிஸ்துவால் வாழ முடியும். ஏனென்றால் இந்தக் கிறிஸ்து அப்படிப்பட்ட வெளிப்பாட்டைத் தருவார். இரண்டாவது, நம்முடைய பெற்றறிவிலிருந்து உற்றறிவாக்குவதற்கு அப்படிப்பட்ட வாழ்க்கைச் சூழல்களை நம்முடைய வாழ்க்கையிலே அமைக்கின் றார். மூன்றாவது, நாம் ஊழியம் என்று சொல்கிறோம் இல்லையா? ஒரு ஊழியத்தை நமக்குள் உருவாக்குவதற்காக ஆறுதல் தேவைப்படுகின்ற, விடுதலையும் இரட்சிப்பும் மீட்பும் தேவைப்படுகின்ற, மக்களுக்கு நாம் கிறிஸ்துவைப் பரிமாறுவதற்கு ஒரு ஊழியத்தை உருவாக்குவதற்காக. நான்காவது, தேவனுடைய மக்களுக்காக மன்றாடுவது. தேவனுடைய மக்களுக்கு நம்முடைய மன்றாட்டின்மூலமாக அவர்களுடைய வாழ்க்கைக்குள் ஒரு நன்மையைக் கொண்டுவரும். தேவனுடைய இரட்சிப்பை, தேவ னுடைய மீட்பை, தேவனுடைய விடுதலையை கொண்டுவருவது. மனிதர்களிடத்தில் அது ஒருநாளும் கிடைக்கவே கிடைக்காது.

*"சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது சொப்பனம் காண்கிறவர்கள்போல இருந்தோம்"* (சங். 126:1). *கர்த்தர் தெற்கத்தி வெள்ளங்களைத் திருப்புவதுபோல நம்முடைய சிறையிருப்பை அவர் திருப்புகிறார்"* (வ. 4). *"உம்மால் செய்யக் கூடாத அதிசயமான காரியம் உண்டோ"* (எரே. 32:17) என்று எரேமியா ஜெபிக்கிறான். இவைகளையெல்லாம் தேவனுடைய மக்கள் பாட்டாக பாடுவார்கள். எந்த இடஅமைப்பில் எரேமியா அப்படி ஜெபிக்கிறார் என்று நீங்கள் 32ஆம் அதிகாரத்தை முழுவதும் வாசித்துப் பார்க்க வேண்டும். *"உம்மால் செய்ய முடியாத அதிசயமான காரியம் ஒன்று உண்டோ?"* என்று அவன் சொன்னபோதும்கூட அவநம்பிக்கையும், பயமும் அவனை ஆட்கொள்கிறது. பிறகு தேவன் அவனிடத்தில் பேசும்போது அவன் சொன்ன ஜெபத்தைத் திருப்பிச்சொல்கிறார். *"இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ.* நீதானே சொல்லி ஜெபம் பண்ணினாய். நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர். Is anything too hard for me? You only prayed nothing is too hard for the Lord."

ஆகவே, தேவனுடைய மக்களுடைய முடிவு உயிர்த்தெழுதல். தேவனுடைய மக்களுடைய முடிவு மகிமை.

யோபுவினுடைய புத்தகம் நமக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கிறது. யோபுவினுடைய முடிவு மரணம் அல்ல. யோபுவினுடைய முடிவு உயிர்த்தெழுதல். 1ஆம் அதிகாரத்தில் பார்க்கிற யோபு வேறு. 42ஆம் அதிகாரத்தில் பார்க்கிற யோபு வேறு. 1ஆம் அதிகாரத்தில் தேவனைப்பற்றிய வெளிப்பாடு வேறு. 42ஆம் அதிகாரத்தில் யோபு அறிந்திருந்த தேவனுடைய வெளிப்பாடு வேறு. 1ஆம் அதிகாரத்தில் தேவனைப்பற்றிய அவனுடைய அறிவு கேட்டறிவு. 42 ஆம் அதிகாரத்தில் அவனுக்கு தேவனைப்பற்றி இருந்த அறிவு அனுபவ அறிவு. 1ஆம் அதிகாரத்தில் அவன் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு, மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு, பரிமாறுவதற்கு, அவனிடத்தில் கிறிஸ்து இல்லை. ஆனால் 42ஆம் அதிகாரத்திலே மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு, வழங்குவதற்கு, பகிர்வதற்கு, பரிமாறுவதற்கு

அவனுக்குள் கிறிஸ்து இருந்தார். 1ஆம் அதிகாரத்தில் தனக்காக, தன்னுடைய பிள்ளைகளுக்காக, அவன் வேண்டுதல் செய்கிறான். ஆனால் 42ஆம் அதிகாரத்திலே அவன் தனக்காக, தன்னுடைய பிள்ளைகளுக்காக, மட்டும் இல்லை, தன்னுடைய சிநேகிதர்களுக்காகவும் வேண்டுதல் செய்ய முடிகிறது. தேவன் குறைவுபட்ட எல்லா மக்களுக்காகவும் அவன் மன்றாட முடிந்தது. தேவனுடைய மக்கள் எல்லாரும் இப்படிப்பட்ட சூழ்நிலைகளின்மூலமாக உண்மையிலேயே ஒரு சபை வாழ்க்கை அல்லது சமுதாய வாழ்க்கை, சரீர வாழ்க்கை வாழ்வதென்றால் என்ன என்பதை அனுபவத்தில் அறிந்து கொள்வதற்கு தேவன் நமக்கு கிருபை செய்கிறார். சபை வாழ்க்கை என்று சொல்வது வேறு. சபை வாழ்க்கை வாழ்வது வேறு. உண்மையிலேயே சபை வாழ்க்கையிலே தேவன் ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். அங்கே கிறிஸ்துவினுடைய பரிபூரணத்தை நாம் பெற முடியும். தனிப்பட்ட தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்ல. தேவனுடைய மக்கள் எல்லாரையும் இப்படிப்பட்ட சூழ்நிலைகள்வழியாக தேவன் ஒரு சமுதாயமாக நடத்துவார்; ஒரு குடும்பமாக அல்லது ஒரு சபையாக தேவன் இப்படிப்பட்ட அனுபவத்தின்மூலமாய் நடத்துவார். நடத்தி முன்பு நமக்கிருந்த கிறிஸ்துவின் அளவைவிட இப்பொழுது நமக்குள் இருக்கிற கிறிஸ்துவின் அளவைப் பெருக்குவார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.